<u>அவசரக்கூட்டம்</u>

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2020-ம் ஆண்டு விளம்பி வருடம் மே மாதம் **29.05.2020–ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**<u>தீர்மானம் எண் : 135 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மானம் எண். 108 / 2018, நாள். 27.04.2018 ன், 03/2019, நாள். 18.01.2019 மற்றும் 120/2019 நாள். 31.05.2019–ன்படி 117 பேர் தனியர் மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 513 /– என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்திட பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.06.2019 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 31.05.2020-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 21.05.2019-ந்தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் (01.06.2020 முதல் 31.05.2021) நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019/உ3, நாள். 20.08.2019-ன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தினக்கூலி ரூ. 535 /– அடிப்படையில் துப்புரவு பணியினை மேற்கொள்ள EPF, ESI, பாதுகாப்பு உபகரணம், ஆயுள்காப்பீடு, சீருடை மற்றும் நிர்வாக கட்டணம் உட்பட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 229.00 லட்சம் ஆகும். மேற்படி செலவினத்தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வருவாய் மற்றும் பொது நிதியிலிருந்து மேற்படி செலவினம் மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 136 / 2020</u>**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 108 / 2018, நாள். 27.04.2018, 03/2019, நாள். 18.01.2019 மற்றும் 120/2019 நாள். 31.05.2019 ன் படி 117 பேர் தனியர் மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 513 /- என தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்தி பணி உத்திரவு வழங்கப்பட்டு 01.06.2019 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 31.05.2020ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 21.05.2020–ந் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019/உ3, நாள். 20.08.2019 ன்படி (2019-2020) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால்

அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்தாலும், தற்போது கொரோனா நோய் தொற்றின் காரணமாக 144 தடை உத்திரவு நடைமுறையில் உள்ளதாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்கள் கோரியுள்ள தொகையான நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /– என்று கோரியுள்ளதை ஏற்க மன்ற அனுமதி வேண்டியும், தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஓராண்டிற்கு (01.06.2020 முதல் 31.05.2021 வரை) 117 துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்திட காலநீடிப்பு செய்திடவும், காலநீடிப்பு செய்திடும் நிதியாண்டிற்கு அந்த நிதியாண்டுக்குரிய திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி தொகையினை கணக்கீடு செய்து ஒப்பந்தாரருக்கு வழங்கவும் ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்யவும் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1) மன்ற அனுமதிக்கலாம்
2) கொரோனா நோய் தொற்று 144 தடை உத்திரவு காரணமாக பணி நீடிப்பு உத்திரவு வழங்கலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>தீர்மானம் எண் : 137 / 2020</u>**

இந்நகராட்சி பகுதிகளில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தார்சாலைகளில் குழாய் விஸ்தரிப்பு மற்றும் காலமுறை போன்ற காரணங்களால் பழுதுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் பள்ளிக்கு செல்லும் வாகனங்கள் சென்றுவர இடையூறாக உள்ளது. எனவே பொதுமக்கள் நலன்கருதி கீழ்காணும் தார்சாலைகளை சீரமைக்க வேண்டியது மிகவும் அவசியமாகவும், அத்தியாவசியமாகவும் உள்ளது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பச்சாக்கவுண்டன்வலசு, தண்ணீர்பந்தல் முதல் அரியாண்டிவலசு சாலை வரை தார்சாலை அமைத்தல் மற்றும் பச்சாக்கவுண்டன்வலசு குறுக்கு வீதி, ஈரோடு சாலை கிழக்கு, மேற்கு சாலை, மூலனூர் சாலை குறுக்கு சாலை மற்றும் வையாபுரி நகர் குறுக்கு சாலை பகுதிகளில் பழுதடைந்தள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 2 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட கணபதிபாளையம் தெற்கு, ஈரோடு சாலை (பேருந்து நிலையம் எதிரில்) தார்சாலை அமைத்தல் மற்றும் நாச்சிபாளையம் குறுக்கு வீதி, இந்திராநகர் காலனி, திருமங்கலம், குமாரவலசு சாலை, கச்சேரிவலசு குறுக்கு வீதி, உப்புப்பாளையம் சாலை மற்றும் சீரங்கராயகவுண்டன்வலசு பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 3 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அழகாபுரிநகர், நடேசன் நகர், திருச்சி கோவை சாலை குறுக்கு வீதி, சொரியங்கிணத்துப்பாளையம் முதல் உரக்கிடங்கு மற்றும் ஈரோடு சாலை குறுக்கு வீதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |

| | | |
|---|---|---|
| 4 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட காடையூரான்வலசு பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் தண்ணீர்பந்தல் காலனி, கே.பி.சி.நகர் (திருச்சி கோவை சாலை முதல் கான்வென்ட் சாலை), மு.பழனிச்சாமி நகர், வள்ளியரச்சல் குறுக்கு சாலை, துரைராமசாமி நகர் மற்றும் தீத்தாம்பாளையம் பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 5 | காமராஜபுரம் (கான்வென்ட் சாலை முதல் திருச்சி கோவை சாலை), சிவநாதபுரம், உப்புப்பாளையம் குறுக்கு வீதி, தாராபுரம் சாலை குறுக்கு வீதி, சுப்பிரமணியகவுண்டன்வலசு, செம்மாண்டம்பாளையம் குறுக்கு வீதி, செம்மாண்டம்பாளையம் முதல் மூலனூர் சாலை பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 6 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட அரியாண்டிவலசு பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் கணபதிபாளையம் முதல் பொத்தியக்காடு, காமராஜபுரம் குறுக்கு சாலை மற்றும் எல்.கே.ஏ.நகர் குறுக்கு சாலை பகுதிகளில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 7 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட எல்.கே.சி.நகர் குறுக்கு சாலையில் தார்சாலை அமைத்தல் மற்றும் சொரியங்கிணத்துப் பாளையம் மாணவியர் விடுதி, ஈரோடு சாலை தெற்கு குறுக்கு வீதி, வி.பி.எம்.எஸ். நகர் குறுக்கு சாலை, வேலகவுண்டன் பாளையம் முதல் கால்வாய் வரை மற்றும் அகலரப்பாளையம் புதூர் பகுதியில் பழுதடைந்துள்ள தார்சாலைகளை சீரமைத்தல் | 200.00 |
| 8 | வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட திருச்சி கோவை சாலை (பழைய பேருந்து நிலையம் அருகில்), சேரன் நகர், நாச்சிபாளையம் முதல் கணபதிபாளையம் சாலை மற்றும் வேலகவுண்டன்பாளையம் குறுக்கு வீதியில் தார்சாலை அமைத்தல் | 100.00 |
| | **மொத்தம்** | **1500.00** |

நகராட்சியில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-21 திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

அலுவலககுறிப்பு

மேற்படி பணிக்கு தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP) 2020-21 திட்டத்தின்கீழ் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி நகராட்சிகள் நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

(கோப்பு எண். 535 / 2020 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**தீர்மானம் எண் : 138 / 2020**

வெள்ளகோவில் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் https://www.tntenders.gov.in/nicgep/app என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டு வருகிறது. மேற்படி இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிட ஆணையாளருக்கு Digital Signature Certificate card வாங்கப்பட வேண்டும். எனவே மேற்படி Digital Signature Certificate card–ஐ கோவை Safe Solutions நிறுவனத்தின் மூலம் பெற்றுக் கொள்ளவும், அதற்கான செலவினம் ரூ. 2000 /–த்தை, மேற்படி நிறுவனத்தின் பெயரில் காசோலையாக வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 105 / 2018 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

2.3.21

**ஆணையாளர் / தனி அலுவலர்**
**வெள்ளகோவில் நகராட்சி**

02.03.21